**செய்தி வெளியீடு எண்.960** **நாள்.6.11.2008**

## இலங்கைத் தமிழர்களுக்கு முதல் கட்டமாக அனுப்பி வைக்கப்படும் நிவாரணப் பொருள்களை முதலமைச்சர் கலைஞர் பார்வையிட்டார்

இலங்கையில் பாதிப்புக்கு ஆளாகியிருக்கும் தமிழர்களுக்கு உதவுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, நிதி உதவிகளும், நிவாரணப் பொருள்களும் இதுவரையில் பத்து கோடி ரூபாய் அளவுக்கு தமிழக அரசுக்கு வந்து சேர்ந்துள்ளன.

அரிசி, பருப்பு, டீத்தூள், சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களுடன், குளிக்கும் சோப்பு, துவைப்பதற்கான சோப்பு, பற்பசை ஆகியனவும், வேட்டி, கைலி, சேலை, பெண்கள் அணியும் ஆயத்த ஆடை, துண்டுகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகிய துணி வகைகளும் அடங்கிய நிவாரணப் பொருட்கள் 80 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்குவதற்காகத் தனித்தனியே சிப்பங்களாகத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசினால் முதல் கட்டமாக அளிக்கப்படும் ஏறத்தாழ 2,000 டன் எடையுள்ள இந்த நிவாரணப் பொருள்கள் சென்னையில் இருந்து கப்பல் மூலம் கொழும்பு துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு இலங்கையில் உள்ள இந்திய நாட்டுத் தூதரிடம் ஒப்படைக்கப்படும். அவரிடமிருந்து இந்த நிவாரணப் பொருள்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர், இலங்கையில் பாதிப்புக்கு ஆளாகியிருக்கும் மக்களில் ஏறத்தாழ 80 ஆயிரம் தமிழர் குடும்பங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படும்.

இந்த நிவாரணப் பொருள்கள் கப்பல் மூலம் இலங்கைக்குக் கொண்டு செல்லப்படுவதையும், அங்கு பாதிப்புக்கு ஆளாகியுள்ள தமிழ் மக்களுக்கு இவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்திய தூதரகம் மேற்கொள்வதையும் கண்காணிக்கும் பொறுப்பை மத்திய அரசின் வெளியுறவுத் துறை ஏற்றுள்ளது.

இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள இந்த நிவாரணப் பொருள்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பார்வையிட்டார்கள். அவ்வமயம் செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழுமத்தின் அலுவலர் திரு. தாமஸ் ரீஸ், மத்திய அரசின் வெளியுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரி திரு. ஐ.எம். பாண்டே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப. மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

நிவாரணப் பொருள்களைப் பார்வையிட்ட திரு. தாமஸ் ரீஸ், நிவாரணப் பொருள்கள் அனைத்தும் நல்ல தரமுடன் உள்ளதாகத் தெரிவித்தார்.

நிவாரணப் பொருள்கள் தமிழகத்திலிருந்து 8.11.2008 சனிக்கிழமை அல்லது 9–11–2008 ஞாயிற்றுக் கிழமை அன்று சென்னை துறைமுகத்திலிருந்து இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு, சென்னை–9.